# எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை.. 12–ஆம் பக்கத் தொடர்ச்சி

மட்டுமல்ல காலநிலை மாற்றம் குறித்தும் அதீத கவனத்தை இந்த அரசு செலுத்தி வந்திருக்கிறது. *“We are building a sustainable future. Climate action is not just a Priority, is Tamil Nadu’s responsibility to future generations”*. (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அடிப்படைத் தத்துவத்தை இந்த அரசு முழுவதும் உணர்ந்திருக்கிறது.

எங்களுடைய சாதனைகள் ஒருபுறம் இருந்தாலும், சவால்கள் நிறைந்ததாகவே இந்தப் பயணம் அமைந்திருக்கிறது என்பதையும் நான் இந்தப் பேரவையின் கவனத்திற்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபோது, உலகமே கோவிட் பெருந்தொற்றால் முடங்கிப்போய் இருந்தது. ஆக்சிஜன் கிடைக்காமல் நாடெங்கும் பலர் உயிர் துறக்கும் இக்கட்டான நிலை. அவற்றை எல்லாம் திறம்பட சமாளித்து தமிழ்நாட்டு மக்களை காத்து, நம் பொருளாதாரத்தை மீண்டும் சீர்ப்படுத்திய பெருமை நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைச் சாரும். இந்த ஐந்து வருட காலத்தில், அழையா விருந்தாளிகளாக வந்து, இன்னல்கள் பல தந்த இயற்கைப் பேரிடர்கள், பெருவெள்ளம், கனமழை என அனைத்துப் பேரிடர்களையும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சி திறம்பட நிர்வகித்தது. மெட்ரோ இரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுப்பு, நிதி ஒதுக்கீடு நிறுத்தி வைத்தது, மும்மொழிக் கொள்கையை வலியுறுத்தி அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் ஒன்றிய அரசின் உதவியை நிறுத்தியது, ஜல் ஜீவன் திட்டத்திற்கு நிதி மறுப்பு என பல்வேறு நிதிச்சுமையோடு தான் நாம் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில், இயற்கைப் பேரிடர்கள் ஒருபுறம், ஒன்றிய அரசு தரும் செயற்கை நெருக்கடிகள் மறுபுறம் என பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டு, தமிழ்நாட்டு மக்களை பாதுகாத்து வழி நடத்திக் கொண்டிருப்பது நம்முடைய முதல்வர் அவர்கள்தான். சவால்கள் நிறைந்த பாதையில், நிலை குலையாமல், நேர்கொண்ட பார்வையோடு நாம் பயணம் செய்வதற்கு வழி காட்டுவது, முத்தமிழறிஞர் கலைஞர் அளித்த ஒரே ஒரு வாசகம்தான், (மேசையைத் தட்டும் ஒலி) “நாம் தென்றலைத் தீண்டியது இல்லை, ஆனால் தீயைத் தாண்டி இருக்கிறோம்”. (மேசையைத் தட்டும் ஒலி)

### சமூக அமைதி – மத நல்லிணக்கம் பேணிக் காக்கப்படுகிறது!

மதச்சார்பின்மை. கடந்த ஐந்து வருடங்களில், தமிழ்நாட்டில் சாதி மத மோதல்கள் ஏதும் இல்லை. அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திடும் தமிழ்நாட்டில், குழப்பம் விளைவிக்க முயற்சி செய்த சக்திகள் முதலமைச்சரால் முறியடிக்கப்பட்டன. வரலாற்றின் பக்கங்களை நீங்கள் புரட்டிப் பார்த்தால், பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில், சமூக நல்லிணக்கம் நிலவியே வந்திருக்கிறது. உலகம் வியக்கும் வண்ணம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய மாமன்னன் இராஜராஜ சோழன், நாகப்பட்டினம், சூடாமணி புத்தவிகாரை கட்டுவதற்கும் தானமாக நிலங்களை வழங்கினார் என்பது வரலாறு. அந்த வகையில், இந்த ஐந்தாண்டு காலம் முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் சமூக அமைதி நிலவி, மத நல்லிணக்கம் மிகுந்த சிறப்போடு பேணிக் காக்கப்படுகிறது. சுருங்கச்சொன்னால் நமது கொள்கை, “ஒன்றே குலம் ஒருவனே தேவன்”. (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் யாருடன் போட்டி போடுகிறோம். மனித வளம், தொழில் வளர்ச்சி என எந்தத் துறைகளை எடுத்தாலும், இந்தியாவிலேயே முதன்மை மாநிலங்களுள் ஒன்றாக, தமிழ்நாடு இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏற்றுமதி தரக்குறியீட்டில்; மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியில்; மோட்டார் வாகனங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில்; புத்தொழில் சூழல் அமைவுக்கான தரவரிசையில்; தொழிற்சாலைகளில் பணியுரியும் மகளிரின் பங்கேற்பில்; உயர்கல்விச் சேர்க்கை விகிதத்தில்; நாட்டிலேயே சிறந்த உயர் கல்வி நிறுவனங்களின் அதிக எண்ணிக்கையில், நிதி ஆயோக்கின் (*NITI Aayog*) நீடித்த வளர்ச்சி இலக்குக் குறியீடுகளில், தேசிய அளவில் குறைவான வறுமை நிலை கொண்ட மாநிலங்களில் ஒன்று என்ற வகையில்; அதிக எண்ணிக்கையில் ராம்சர் தளங்களைக் கொண்ட பெருமை பெற்ற மாநிலம் என்ற வகையில், இந்தியாவிலேயே நாம் மிகப்பெரிய முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாம் மற்ற மாநிலங்களுடன் போட்டி என்பதை விட, வளர்ந்த நாடுகளுக்கு இணையான வளர்ச்சி பெற வேண்டும் என்பதே நமது இலக்கு. கடந்த ஐந்தாண்டுகளின் சாதனையை இந்த வகையில் நாம் தொகுத்துச் சொன்னால், “இமயம் வெல்வோம், சிகரம் தொடுவோம், தரணியை நாம் ஆள்வோம்”. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணா அவர்கள், உலகே வியக்கும் அளவிற்கு சென்னையில் 2-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று

## உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கையாக நம்முடைய முதலமைச்சர் திகழ்கிறார்!

பெயரிட்டு வரலாற்றில் நிலைபெற்றார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குமரிமுனையில் வள்ளுவருக்கு வானுயர சிலை எழுப்பினார்கள். நம்முடைய முதல்வர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களோ நாடே வியக்கும்வண்ணம் கீழடி, பொருநை அருங்காட்சியகங்களை அழகுற இன்றைக்கு வடிவமைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என உரைத்து, இரும்பின் தொன்மையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் தமிழர்கள் என்பதை அறிவியல்பூர்வமாக நம் முதல்வர் பிரகடனம் செய்ததை இந்த நாடே திரும்பிப் பார்த்தது. அந்த வகையில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற பெயரும், அவர்தான் தமிழ்ப் பண்பாட்டின் காவலர் என்பதும் வரலாறு என்றைக்கும் தன் பக்கங்களில் மறவாது குறித்து வைத்துக்கொள்ளும்.

குழந்தைகளுக்கு பெயர் சூட்டி மகிழ்வது நம் இயல்பு. நண்பர்களுக்கு செல்லப்பெயரிட்டு அழைப்பது நமக்கெல்லாம் இன்பம் தரும். ஆனால், நம் முன்னோருக்கு பெயர் சூட்டும் வாய்ப்பு வரலாற்றில் மிகச் சிலருக்குத்தான் கிடைக்கும். அந்த வகையில் நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு, தமிழ்நாடு என்று பெயரிட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரிசையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுப்பிய வள்ளுவர் சிலைக்கு பேரறிவுச்சிலை என்று பெயரிட முதல்வர் அவர்களுக்கு காலம் ஒரு அருமையான வாய்ப்பை வழங்கியது. அதுமட்டுமல்லாமல் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய நம் உயிருக்கு நிகரான தமிழ்த்தாய் வாழ்த்தை “மாநிலப் பாடல்” என்று அரசு அங்கீகரிக்கச் செய்திடும் வாய்ப்பையும் வரலாறு அவருக்கு வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமின்றி, இந்தியாவின் பல மாநிலங்களில் வாழும் தமிழர்களும் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அயலகத் தமிழர் தினத்தை நமது அரசு கொண்டாடி மகிழ்கிறது. இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக புதிய வீடுகள் வழங்கி, உதவித்தொகை உயர்வு, சுய உதவிக்குழு கடன் உதவி, இளைஞர்களுக்கு திறன் பயிற்சி என பல நல்ல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த இலங்கை மக்களுக்கு உதவி செய்திட நிவாரணப் பொருட்கள் அனுப்பியது முதல், அண்மையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உணவுப் பொருட்கள், உயிர் காக்கும் மருந்துகளை அனுப்பி வைத்த இந்த மனிதாபிமானம்மிக்க செயல் உலகத் தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. உலகமெங்கும் வாழும் தமிழர்களின் குழந்தைகள் தமிழ் கற்றிட, தமிழர் கலைகளை அறிமுகப்படுத்திட ஆசிரியர்களை தமிழ்நாட்டிலிருந்து அனுப்பும் அறிவிப்பு செய்திட்டதுவரை இன்னும் எண்ணற்ற பல திட்டங்கள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய சிந்தனையில் உதித்ததுதான். அந்த வகையில் இன்று “உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கையாக” நம்முடைய முதலமைச்சர் அவர்கள், திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஐந்தாண்டுகளில் நம்முடைய முதல்வர் அவர்கள் தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தோழி விடுதிகள் திட்டம், அன்புக் கரங்கள் திட்டம், அன்புச் சோலைகள் திட்டம், தாயுமானவர் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, கல்லூரிக் கனவு, நான் முதல்வன், மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் என நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டேபோகக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டங்களினுடைய எண்ணிக்கையும், பெயர்களும் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களின் நலத் திட்டங்களை நிறைவேற்றும் அதேவேளையில் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்திடவும் இந்த அரசு உறுதி பூண்டு வருகிறது. தமிழ்நாடெங்கும் சாலைகள், மேம்பாலங்கள், மாபெரும் மருத்துவமனைகள், கல்லூரிகள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், மாவட்டந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் தொழில் பூங்காக்கள், புதிய விமான நிலையங்கள் அமைக்கக்கூடிய இத்தகைய முழு பணிகளுக்கும், உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. சுருங்கச் சொன்னால், *It’s a fine blend of Massive Welfare Schemes and Major Infrastructure projects.* (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகத்துடனான உரையாடலைத் தொடர்ந்து செய்வது ஒரு அரசின் இன்றியமையாத கடமையாக இந்த அரசு கருதி வந்திருக்கிறது.

மாபெரும் சிந்தனையாளர்கள் இங்கே உலகை வழி நடத்தக்கூடியவர்கள். அந்த முற்போக்குச் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்து திட்டங்களைத் தீட்டி அரசை நிர்வகிப்பவர்கள் தலைவர்கள். அதேவேளையில் நல்ல திட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஆக்கப்பூர்வமான கருத்துகளை முன்வைப்பது களச்செயல்பாட்டாளர்களின் கடமை. இந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சிக்காலத்தில் சிந்தனையாளர்கள், தலைவர்கள், அதைப்போல நம்முடைய களச்செயல்பாட்டாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் வாய்ப்பு தொடர்ந்துகொண்டே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. “நாம் அனைவரும் ஒன்றிணைவோம், ஊர் கூடித் தேர் இழுப்போம்”!

### பெயர் என்பது ஒரு சமூகத்தின் ஆணிவேர்!

பெயரில் என்ன இருக்கிறது, *What’s in the name?* ஓர் இனத்தின் வரலாறும், பண்பாடும், மரபும் பெயரில்தான் அடங்கியிருக்கிறது. எனவே, பெயரில் என்ன இருக்கிறது எனச் சொல்லிவிட முடியாது. பெயர் என்பது ஒரு சமூகத்தின் ஆணிவேர். ஆகவே, தமிழ்நாடு அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதல் பெயர்களைச் சூட்டுவதிலும், பெயர்களை மாற்றுவதிலும் மிகக் கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. பெயர்மாற்றம் என்பது வெறுமனே சொல்லின் மாற்றமாக அல்லாமல் ஒரு சிந்தனை மாற்றமாக உருவாக்கக்கூடிய வகையில், நற்செயலுக்குத் தூண்டுகோலாக இருக்கக்கூடிய வகையில் அமையவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. திட்டத்திற்குப் பெயர் சூட்டுவதில், முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய தனிக் கவனத்தையும், அக்கறையையும் கருத்தில் கொண்டு இந்த அரசு அவற்றிற்கான பெயர்களை இட்டுவருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் பணியாக வேளாண்மைத் துறை என்பது வேளாண்மை, உழவர் நலத் துறையாக மாற்றம் பெற்றது; சமூக நலத் துறை என்பது சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையாக மாற்றம் பெற்றது; சமூகப் பாதுகாப்புத் துறை என்பது சமூகப் பாதுகாப்பு இயக்ககம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையாக மலர்ந்தது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ் நிலத்தில் குடிசைகளே இல்லாமல் எல்லோரும் நிரந்தரமான இல்லங்களில் குடியிருத்தல் வேண்டும் என்னும் அரசின் எண்ணத்தை உணர்த்தும் வகையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக மலர்ந்தது. சுற்றுச்சூழல் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையாக மாறியது.

திட்டங்களின் பெயர்களோ, புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், அன்புச் சோலை, அன்புக் கரங்கள், தாயுமானவர், தொல்குடி என்று தாய்த்தமிழின் இனிமையும், திட்டத்தின் உயர்நோக்கமும் இணைத்திடும் முயற்சியாகவே அது அமைந்தது.

சமபந்தி போஜனம் சமத்துவ விருந்தாக மாறி தமிழர் விருந்தோம்பலையும் எடுத்துச் சொல்லும் வகையில் அமைந்துள்ளது. உடல் நலிவு காரணமாக மனித நேயமிக்க மருத்துவம் நாடி வருபவர்களைப் மருத்துவப் பயனாளிகள் எனச் சொல்வதன்மூலம், அவர்கள் உள்ளத்தில் மலர்ச்சியை உருவாக்க முடியும். அதில் நம்மால் சொல்லாலும் சுகமளிக்க இயலும் என்பதை நாம் காட்டியிருக்கிறோம்.

### ஒரு சொல்கூட பிறரைக் காயப்படுத்தக் கூடாது என்று செயல்படும் முதல்வர்!

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டுவரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் ‘சமூக நீதி விடுதிகள்’ என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது. தமிழ்நாடு சட்டப்பேரவையில், இந்த மண்ணின் ஆதிக் குடிகளை இழிவுபடுத்தும் அடையாளமாகக் காலனி என்ற சொல் பதிவாகியிருக்கிறது. ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாகவும், வசைச் சொல்லாகவும் இது மாறியிருப்பதால் இனி இந்தச் சொல் அரசு ஆவணங்களிலிருந்தும், பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். ஒரு சொல்கூடப் பிறரைக் காயப்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்று செயல்படும் முதல்வர் தலைமையிலான இந்த அரசின் மாண்பை காலனி எனும் இந்தச் சொல்லின் பெயர் நீக்கம் என்றென்றைக்கும் உணர்த்தும்.

அதேபோல், இலங்கைத் தமிழர்கள்-புலம் பெயர்ந்து நம்மை நாடி வந்தவர்களை ஒரு

## நாடே வியக்கும் வண்ணம் கீழடி, பொருநை அருங்காட்சியகங்களை முதலமைச்சர் திறந்து வைத்துள்ளார்!

காலத்தில் அகதிகள் என்று அழைத்தோம். அவர்கள் குடியிருக்கக்கூடிய அந்தப் பகுதிகள், அகதிகள் முகாம் என்றுதான் அழைக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த அகதிகள் என்ற சொற்றொடரையே மாற்றி, இலங்கைத் தமிழர் என்று அவர்களுடைய தாய் தமிழ் தொப்புள்கொடி உறவுகளை அழைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு தனித்த அங்கீகாரத்தையும் அடையாளத்தையும் வழங்கியது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### மாற்றுக்கருத்து கொண்டவரையும் மதித்து, போற்றும் முதல்வரின் இயல்பு!

மாற்றுக்கருத்து கொண்டவரையும் மதித்து, அரசியல் தளத்தில் எதிர் நிலையில் நின்று களமாடுபவர்களையும் அரவணைத்துச் செல்லும் பெருந்தன்மைக்கு சொந்தக்காரர், நம்முடைய முதல்வர் அவர்கள். உண்மையைச் சொல்வதென்றால் எங்களுக்கேகூட அவ்வப்போதெல்லாம் சிறிது வியப்புகள் ஏற்படுவதுண்டு. எங்கள் கழகத் தோழர்கள், உடன்பிறப்புகளின் சுக துக்க நிகழ்வுகளில் பங்குபெறுவதைக் காட்டிலும், மாற்றுக் கட்சியினர், எதிர் கட்சியினர் ஏன் எங்களை மிக அதிகமான அளவில் விமர்சிக்கும் நபர்கள் யாராவது ஒருவர் இருந்தாலும், அவர்களுக்கு ஏதாவது ஒன்று என்றால் உடனடியாக நேரடியாகச் சென்று பார்ப்பது எங்களுடைய முதலமைச்சர் அவர்களுடைய இயல்பு.

எங்கள் முதலமைச்சருக்கு, ஏன் எங்கள் முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சருக்கு, மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட எதிர்கட்சியினர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எதிரிகளே கிடையாது. இந்த அரசு பொறுப்பேற்றபோது கோவிட் பெருந்தொற்று காரணமாக முன்னாள் முதல்வர், இன்றைய எதிர்கட்சித் தலைவருடைய படத்தைத் தாங்கி பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படாமல் இருந்த புத்தகப் பைகளை பெருந்தன்மையோடு அனைத்துக் குழந்தைகளுக்கும் விநியோகம் செய்யச் சொல்லி உத்தரவிட்ட பெருந்தன்மை யாருக்கு வரும்? எனவே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே வந்து தன்னுடைய நன்றியை நேரில் தெரிவிக்க வாய்ப்பில்லாத நிலையில், அவர் சார்பாகவும் நான் முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு ஊழியர்கள். அரசு ஊழியர்களின் மீது டெஸ்மா, எஸ்மா சட்டங்களை எல்லாம் போட்டு சிறையில் தள்ளிய காலம் ஒன்று உண்டு. ஆனால், அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகால கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசின் புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் அறிவித்தபோது, அரசு ஊழியர்கள் பெருமகிழ்ச்சியோடு இந்தத் திட்டத்தினை வரவேற்றிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் அறையில் மகிழ்ச்சி பொங்க அரசு அலுவலர்கள் முதல்வர் அவர்களுக்கு இனிப்பு ஊட்டிவிட்ட அதிசயமும் அன்றைக்கு நடந்தது. எனவே, இந்த ஆட்சி, “அரசு ஊழியர்களின் நலன் காக்கும் ஆட்சி”(மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணாவின் வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய திசையில் பயணித்து, மாநில உரிமைகளை மீட்டெடுக்க நாட்டில் கூட்டாட்சி தத்துவத்தை நிலைநிறுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து முழு முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். கூட்டாட்சி தத்துவத்தை குலைத்திடும் எந்த முயற்சி தலைநகரில் உருவானாலும், அதை எதிர்க்கும் முதல் குரல் தமிழ்நாட்டிலிருந்துதான் ஒலிக்கும் என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் அண்மையில் தமிழ்நாடு அரசு அமைத்த ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் முதற்கட்ட அறிக்கை இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆட்சி மாநில உரிமைகளை பாதுகாக்க உரக்கக் குரல் கொடுக்கும் ஆட்சி.

இந்த ஆட்சியில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், ஒரு மிக முக்கியமான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. நலத் திட்டங்களைப் பெறும் பயனாளிகள் தாங்கள் பெறுவது சலுகை அல்ல; அது அவர்களுடைய உரிமை என்பதை பொதுமக்களுக்கும், அரசு இயந்திரத்திற்கும் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் இந்தத் திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்று பொருத்தமாகப் பெயரிடப்பட்டிருக்கிறது.

அரசின் திட்டங்களை சொல்லி வந்திருக்கிறேன். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாகத் திறன் எந்தளவிலே இருந்திருக்கிறது. அவருடைய கூர்த்த மதிநுட்பம் எந்தளவில் இந்த நாட்டிற்குப் பெருமளவில் உதவியிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய மதிநுட்பமும், நிர்வாகத் திறனும் உலகறிந்தது. அவர் வழியில் நம்முடைய முதல்வர் அவர்களுடைய திறமையான நிர்வாகம் குறித்து இந்த நாடு அறிந்துகொள்ளக்கூடிய நிகழ்வு ஒன்று சமீபத்திலே நடைபெற்றது.

சரியாக ஒரு வாரத்திற்கு முன்னால், சென்ற வெள்ளிக்கிழமை வங்கக் கடலோரம் கடல் அலைகள் அன்றையதினம் சூரியன் உதயமாகும்போது, அது உதயமாகும் நேரம் குறித்து தங்களுக்குள் அலைபேசிக் கொண்டிருந்தன. வானவியல் நிபுணர்கள் அன்றையதினம் சூரிய உதயம் என குறித்துக் கொடுத்த நேரம் காலை 6 மணி 32 நிமிடங்கள். அதே வேளையில், சென்னை தொல்காப்பியப் பூங்காவில் நடைபயிற்சி மேற்கொண்டிருந்தது இன்னும் ஓர் உதயசூரியன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவருடைய எண்ணமெல்லாம் அவருடைய அலைபேசியிலே வரக்கூடிய அழைப்புகளுக்காக காத்திருந்தது. மிகச் சரியாக 6-32 மணிக்கு வந்த செய்தி, தமிழ்நாடு எங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் பெற்றிடும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிரின் வங்கிக் கணக்கில் (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும் அந்தப் பணி தொடங்கிவைக்கப்பட்டது என்கின்ற செய்தியே அந்த செய்தி.

எப்படி வானில் சூழ்ந்திடும் கருமேகங்களை விலக்கி, கதிரவன் தன் ஒளியை பரப்ப தொடங்குகிறதோ அதேபோல சிறுமதியாளர்களின் தடையை தகர்த்து மகளிரின் உரிமையை நிலைநாட்டி எங்கள் உதயசூரியன் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்திட்ட அந்த செயலை தமிழ்நாடே பாராட்டி மகிழ்கிறது. “இது துல்லிய தாக்குதல் அல்ல, இது துல்லிய தாக்குதல் அல்ல, ஒரு தாயுமானவரின் அன்பான அரவணைப்பு”. (மேசையைத் தட்டும் ஒலி) *“It is not a surgical strike. It is a strategy filled with compassion but executed with clinical precision”*.

நீங்கள் மகளிர் உரிமைத் தொகையாக ஓராயிரம் ரூபாய் கொடுப்பதை நிறுத்த முயற்சித்தால், நீங்கள் மகளிர் உரிமைத் தொகையாக ஓராயிரம் ரூபாய் நாங்கள் கொடுப்பதை நிறுத்த முயற்சித்தால், நான் ஐந்தாயிரம் ரூபாயாக அதைத் தருவேன் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்த முடிவு (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மகளிர் மனம் குளிர்ந்து வாயார வாழ்த்தும் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வு இன்னும் ஒரு உண்மையையும் உணர்த்திச் செல்கிறது சுயமரியாதைத் திருமணம், சட்ட அதிகாரம், இருமொழிக் கொள்கை அதேபோல நம் மாநிலத்தின் பெயர் தமிழ்நாடு என்று சூட்டி இவற்றிற்கு ஏதேனும் பங்கம் வந்தால், பாதகம் வந்தால் மக்கள் கொந்தளித்து விடுவார்கள் என்ற அச்சம் அனைவருக்கும் ஏற்படும். அந்த அச்சம் இருக்கும் வரை இந்த நாட்டை ஆள்வது பேரறிஞர் அண்ணா தான் என்று உரக்கச் சொன்னாரோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல சமூக நீதிக்கு எப்பொழுதெல்லாம் பங்கம் வருகிறதோ அப்போதெல்லாம் தமிழ்நாடு உரத்து குரல் கொடுக்கும்; அந்தக் குரல் எப்பொழுதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கம்பீரக் குரலைத்தான் எதிரொலிக்கும் அதேபோல்தான் மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை யாரேனும் நிறுத்த முற்பட்டால் தமிழ்நாடே கொந்தளிக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உணர்வு இருக்கும் வரை தமிழ்நாட்டை ஆட்சி செய்வது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் என்பதை நான் உரக்கச் சொல்வேன்.

வரலாறு பேசும் சாதனைகள். மாமன்னன் இராசராசன் அவர்களுடைய மெய்க்கீர்த்தி. காரணம், நான் ஏன் இராசராசனை குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அவருக்கு முன்னால் வந்தவர்கள் எல்லாம் புராண கதைகளை எழுதி, அதிலிருந்து வந்ததாக இருந்தது. இராசராசன் தான் முதன்முறையாக தன்னுடைய கல்வெட்டுகளில் தான் உண்மையாக பெற்ற வெற்றிகளை எல்லாம் பட்டியலிட்டு, அவன் ஒவ்வொரு நாடுகளையும் வென்றெடுத்த வரலாற்றைச் சொல்கிறபோது அது மெய்க்கீர்த்தி, உண்மையான புகழ் என்ற பெயரிலே அது அமைக்கப்பட்டது. அவன் சொல்கிறான்,

“ஸ்வஸ்திஸ்ரீ
திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலம் அறுத்தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்கள ஈழமண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீர் ஆயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வள ஊழியர் எல்லா ஆண்டுந்
தொழுதக விளங்கும் ஆண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராச தேவர்க்கு ஆண்டு”

(மேசையைத் தட்டும் ஒலி)

என்று தான் வென்ற நாடுகளினுடைய பட்டியலை எல்லாம் அந்த மெய்க்கீர்த்தியிலே இராசராசன் குறிப்பிட்டுச் சொன்னான். மாமன்னன் இராசராசன் பழந்தமிழகத்தை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டு தமிழர் பெருமையை நிலைநாட்டினார். அவருடைய தனயன் இராஜேந்திர சோழனும் கடல் கடந்து கடாரம் வென்று வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.

### தமிழ்நாடு வளர்ச்சியடைந்திட முதல்வரின் தலைமைத் தொடர்வது காலக் கட்டாயம்!

ஆனால், இந்த நவீன யுகத்தில் மக்களாட்சி மலர்ந்திடும் இந்தக் காலகட்டத்தில் நாம் வேறு எங்கும் படையெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி எதிர்காலத் தலைமுறைக்கு வளம் சேர்க்கும் வகையில் மாபெரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் போதும். மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டை நாம் முன்னணியில் இருக்கச் செய்ய முடியும். அது மட்டுமா! நாம் போட்டி போடுவது இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு அல்ல தென்கிழக்கு ஆசியாவோடு நாம் போட்டி போடுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கிழக்கு ஐரோப்பாவின் வளர்ந்த நாடுகளோடு தான் நாம் போட்டியிடுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற நோக்கோடு விரைந்து பயணிக்கும் தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராக இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அமைந்தது தமிழ்நாட்டினுடைய மாபெரும் நல்வாய்ப்பு வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக பயணித்திட உலகத் தமிழர்களை வழி நடத்திட நமது முதல்வர் அவர்களின் தலைமை தொடர்வது காலத்தின் கட்டாயமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்றின் பக்கங்களை நீங்கள் புரட்டிப் பார்த்தால் ஒவ்வொரு சமூகமும் அவ்வப்போது தனக்குத் தேவையான நாயகர்களை அவ்வப்போது தேர்ந்தெடுத்துக்கொள்ளும் என்ற வாசகங்கள் காணக் கிடைக்கின்றன. அந்தவகையில், உலகை வெல்லும் வேட்கையுடன் விரைந்து பயணிக்கும் தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்தது இந்த திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவரை! அந்த மகத்தான தலைவருடைய கரங்களை பாதுகாப்பாக பற்றிக்கொண்டு நாம் ஒன்றாகப் பயணித்து வென்றிடுவோம்! வாழ்க தமிழ், வாழ்க தமிழ்நாடு!

(மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.